# பொதுவள ஊடகம் - கட்டற்ற மென்பொருள் வரைவுச் செயற்திட்டம்

1. தமிழ் இணையக்கல்விக் கழகம்- விக்கியூடகம்- தமிழ்நாடு கட்டற்ற மென்பொருள் அறக்கட்டளை ஆகியோர் இணைந்து **புரிந்துணர்வு ஒப்பந்தம்** ஒன்றினை மேற்கொள்வது.
2. கணித்தமிழ் மேம்பாட்டிற்காக, பல்கலைக்கழகம், கல்லூரிகள், கல்வி நிறுவனங்களில் **கணித்தமிழ்ப் பேரவையை** அமைப்பது.
3. விக்கியூடகமும், தமிழ் இணையக்கல்விக் கழகமும் இணைந்து பன்னாட்டுத் **தமிழ் ஊடகப் போட்டியை** (International Tamil Media Contest) நடத்துவது.
4. மாவட்ட அளவில் விக்கியூடகப் பங்கேற்பை மேம்படுத்தும் வகையில் **பொதுவள ஊடகப் பட்டறைகளை** நடத்துவது.
5. பொது வள ஊடகக் கல்வியின் தேவை, மேம்பாடு கருதி விக்கியூடகத்துடன் இணைந்து **பயிற்சி வளங்கள் உருவாக்கப் பட்டறையை** (மூன்று நாட்கள்) நடத்துவது.
6. பொது வள ஊடகங்களில் தேர்ந்த எழுத்தாளர்-படைப்பாளர்களை ஈடுபடுத்தும் நோக்கில், **எழுத்தாளர்-படைப்பாளர்களுக்கான விக்கியூடகப் பயிற்சிப் பட்டறை**யை நடத்துவது (இரு நாள்).
7. தமிழில் பொதுவள ஊடக இயக்கத்தை வலுப்படுத்தும் நோக்குடன், **விக்கி தன்னார்வலர்களுக்கு, புத்தாக்கப் பயிற்சி, நிரலாக்கப் பயிற்சி** (மூன்று நாட்கள்) ஆகியவற்றை அளிப்பது.
8. கணித்தமிழ்ப் பேரவையின் நிலைத்த செயற்பாட்டினைக் கருத்தில் கொண்டு **கணித்தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர்களுக்கு மண்டல அளவில் புத்தாக்கப் பயிற்சி** (இரு நாள்) அளிப்பது.
9. தமிழகத்தில் கட்டற்ற ஊடக இயக்கங்களைப் பரப்புவது, கட்டற்ற மென்பொருள் வளங்களை சேகரித்துப் பரப்புவது, கட்டற்ற மென்பொருள் பயிற்சிகளை அளிப்பது என்னும் அடிப்படையில் **கட்டற்ற அறிவு முனையத்தை** (Centre for Free Knowledge) நிறுவிச் செயற்படுத்துவது.
10. **மாதந்தோறும் விக்கிப் பரப்புரைப் பட்டறை**யை தமிழ் இணையக்கல்விக் கழகத்தில் நிகழ்த்துவது.
11. தமிழ் இணையக்கல்விக் கழகம்- விக்கியூடகம்- தமிழ்நாடு கட்டற்ற மென்பொருள் அறக்கட்டளை இணைந்து **செய்தி மடலினை வெளியிடுவது**.
12. **மாதந்தோறும் கட்டற்ற பரப்புரைப் பட்டறை**யை தமிழ் இணையக்கல்விக் கழகத்தில் நிகழ்த்துவது.
13. கட்டற்ற அறிவு முனையத்தின் வாயிலாக **கணித்தமிழ்** என்னும் **பன்னாட்டு கணித்தமிழ் ஆய்விதழை வெளியிடுவது**.